# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 - 261230

kalyanamatha@gmail.com



ஆசிரியர் & வெளியிடுபவர்
அருட்திரு **பபியான் ஜோசப்**

ஆலோசகர் குழு
அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட் சகோதரி. புளோரா

ஆசிரியர் குழு
அருட் சகோதரி. மைக்கிள்
திருத்தொண்டர்.டேவிட் வளன்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. பெலிக்ஸ் அந்தோனி
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்



விளம்பரம்செய்ய
தொடர்புகொள்ள
04639-261330
04639-261230

தொடர்பு முகவரி
திருத்தல அதிபர்
திருக்கல்யாணத்தாய் திருத்தலம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 - 261230


## மலரின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் அருளுரை | 1 |
| உலகத் திருச்சபை செய்திகள் | 2 |
| மறைமாவட்ட செய்திகள் | 3 |
| பங்குச் செய்திகள் | 4 |
| மாதாவே | 6 |
| இளைஞர்களின் வழிகாட்டி | 8 |
| முதல்சனி வழிபாடு | 10 |
| அதிதூதர்கள் | 14 |
| உங்களுக்காக நாங்கள் | 15 |
| அற்புதங்கள் சாட்சிகள் | 21 |
| கன்னிமரியின் பிறப்பு | 22 |
| குட்டீஸ் கார்னர் | 26 |
| வாழ்வுதரும் வார்த்தைகள் | 31 |
| குறுக்கெழுத்துப் போட்டி | 32 |



வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



திருக்கல்யாணத்தாய் மாதஇதழின் ஆர்வமிக்க வாசகர்கள் அனைவருக்கும் திருக்கல்யாணஅன்னையின் அருளும் ஆசியும் பெருக வாழ்த்துகிறேன்.

ஜென்மபாவமின்றி இவ்வுலகிலே அவதரித்து மீட்பராம் இயேசுவை நமக்கு பெற்றுத்தந்து உலகை உய்விக்க வந்த திருக்கல்யாண அன்னையின் புகழை முழுவதும் எடுத்தியம்ப யாராலும் இயலாது. "இது முதல் எல்லா தலைமுறையினரும் என்னை பேறுபெற்றவர் என்பர்" என்ற திருக்கல்யாண அன்னையின் வாக்கிற்கிணங்க அன்று முதல் இன்றுவரை சிறுவர் முதல் பெரியோர் வரை சாதி, சமய, இன வேறுபாடின்றி திருக்கல்யாண அன்னையை போற்றுவதில் மனநிறைவு அடைகின்றனர். அன்பு, இரக்கம், கருணை, தயவு, மனதுருக்கம், தன்னலமின்மை, என்னும் பல சொற்களையும் திருக்கல்யாணஅன்னை என்கின்ற ஒரே சொல்லில் அடக்கிவிடலாம். பிள்ளையின் கண்ணீரை காண எந்த தாயுள்ளமும் பொறுக்காது. "இவரே உன் தாய் " என்று திருக்கல்யாண அன்னையை தம் அன்புச்சீடரிடம் கூறிய நம் ஆண்டவர் இயேசு உலக மக்கள் அனைவருக்குமே தாயாக திருக்கல்யாண அன்னையை தந்தருளினார். அன்று முதல் இன்றுவரை திருக்கல்யாண அன்னை நம்மைக் கண்மணிபோல காத்து வருகிறார். செப்டம்பர் 8ம் தேதி நம் திருகல்யாண தாயின் பிறந்தநாளை கொண்டாடுகிறோம். இந்த நல்ல நாளில் திருக்கல்யாணதாய் நீங்கள் கேட்கும் வேண்டுதல்களை தந்து உங்கள் அனைவரையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக. ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமையன்று கடல்போல பொங்கிவரும் மக்கள் வெள்ளத்திலே திருக்கல்யாண அன்னை சப்பரப்பவனியில் தன்னுடைய பிள்ளைகளுக்கு அனைத்து கொடைகளையும் வாரி வழங்குகிறார். அந்த கண்கொள்ளாக்காட்சியைக் காணவரும்படி உங்களை அன்போடு அழைக்கிறேன். வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். திருக்கல்யாண அன்னையின் ஆசி உங்கள் அனைவருக்கும் உரித்தாகுக.

அன்புடன்

திருத்தல அதிபர்

பொத்தக்காலன்விளை.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!

# உலகத் திருச்சபை



**திருத்தந்தை பிரான்சிஸ்ஸின் முதல் வெளிநாட்டுத் திருப்பயணம்:**

பிரேசில் நாட்டில் ரியோடி ஜெனிரோவில் நடைப்பெற்ற 28-வது உலகஇளையோர்தினக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள சென்றதே திருத்தந்தையின் முதல் வெளிநாட்டுத் திருப்பயணமாகும். 12.15 மணி நேரம் கொண்ட இத்திருப்பயணத்தின் போது தாம் கடந்து சென்ற மௌரித்தானியா, அல்ஜீரியா, செனகல் மற்றும் இத்தாலி போன்ற நாடுகளின் அரசியல் தலைவர்களுக்கு தம் வாழ்த்துகளையும், ஆசீரையும் தந்தி மூலம் அனுப்பினார். பிரேசில் பாதுகாவலர் புனித அப்பெரிசிதா மற்றும் அன்னை மரியாவின் திருத்தலங்களுக்குச் சென்றார் திருத்தந்தை.

**வாழ்வில் செபமும், செயலும் இணைந்து செல்ல வேண்டும் திருத்தந்தை:**

கிறிஸ்தவர்கள் (பொது நிலையினர், துறவியர் மற்றும் அருட்பணியாளர்கள்) யாராக இருந்தாலும் அவர்களின் செபமும், பிறரன்புப் பணிகளும் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரியா வண்ணம் இணைந்திருக்க வேண்டும் என்றும், துன்பத்தில் வாடும் நம் சகோதர சகோதிரிகளுக்கு உதவி செய்யத் தூண்டாத செபம் பலனற்றது என்றும், அதுபோலவே செபம் இல்லாத பிறரன்புச் செயல்களும் ஆபத்தை விளைவிக்கும் என்றும் கூறிய திருத்தந்தை, புனித பெனடிக்ட் கூறியதைப் போல் செபமும்,செயலும் ஒன்றிணைந்து செல்ல வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

**ராய்ப்பூர் உயர்மறை மாவட்டத்துக்குப் புதிய பேராயர்**

பேராயர் விக்டர்ஹென்றி தாக்கூர் அவர்கள், அருட்திரு.பாக்கியராஜ் அவர்கள் குருத்துவ அருட்பொழிவிற்காக நமது திருக்கல்யாணதாய் திருத்தலத்திற்கு நமது மறைமாவட்ட ஆயர் அவர்களோடு வருகை தந்திருந்தார்கள்.ஜீலை 03,2013 ராய்ப்பூர் உயர் மறை மாவட்டத்தின் பேராயராகப் பணியாற்றி வந்த பேராயர் Joseph Augustine Charanakunnel அவர்களின் பணி ஓய்வை ஏற்றுக் கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் Bettiah மறைமாவட்டத்தின் ஆயராகப் பணியாற்றி வந்த ஆயர் விக்டர் ஹென்றி தாக்கூர் அவர்களை ராயப்பூர் உயர்மறைமாவட்டத்தின் புதிய பேராயராக நியமித்துள்ளார். 1954ம் ஆண்டு ஜீலை முதல்தேதி Bettiah மறை மாவட்டத்தின் Chakhni என்ற ஊரில் பிறந்த ஆயர் விக்டர் ஹென்றி தாக்கூர் 1984ம் ஆண்டு மே 3ம் தேதி அருட்பணியாளராகவும் 1998ம் ஆண்டு நவம்பர் 11ம் தேதி Bettiah மறைமாவட்டத்துக்கு ஆயராகவும் அருள் பொழிவு செய்யப்பட்டார்.

நன்றி. நம்வாழ்வு

# மறை மாவட்ட செய்திகள்



1,2-8-13 ஆகிய இருநாட்களும் தூத்துக்குடி பரிசுத்த பனிமயமாதா திருவிழா நவநாள் திருப்பலிகள் மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது.

3-08-2013 அன்று மாலை கள்ளிகுளம் பரிசுத்த பனிமயமாதா திருவிழா நற்கருணை பவனி மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது.

4-8-13 அன்று மாலை தூத்துக்குடி பனிமயமாதா திருவிழா மாலை ஆராதனையில் மேதகு ஆயர் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

5-8-13 தூத்துக்குடி பனிமயமாதா திருவிழா தங்க தேரோட்ட திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

6-8-13 அன்று மாலை நம்பிக்கை ஆண்டு ஆய்வு குழு கூட்டம் மேதகு ஆயர் அவர்கன் தலைமையில் நடைபெற்றது.

7-8-13 அன்று காலை திருத்தொண்டர்கள் சந்திப்பு அன்று மாலை மறைமாவட்ட நிதிக்குழு கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

8-8-13 மாலை TMSS நிர்வாக குழு கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது.

9-8-13 அன்று காலை 2010, 2011 ஆண்டுகளில் குருப்பட்டம் பெற்ற குருக்களை மேதகு ஆயர் அவர்கள் சந்தித்தார்கள்.

10.11-8-13ஆகிய இருநாட்களிலும் வீரபாண்டியன் பட்டணம் பங்கு மக்களை மேதகு ஆயர் அவர்கள் சந்தித்து உரையாடினார்கள்.

14-8-13 அன்று காலை மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலர்கள் சந்திப்பு அன்று மாலை வடக்கன்குளம் ஆலய திருவிழா மாலை ஆராதனையும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

15-8-13 அன்று காலை வடக்கன்குளம் மற்றும் பிரகாசபுரம் திருவிழா திருப்பலிகள் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

16-8-13 அன்று காலை 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் குருப்பட்டம் பெற்ற குருக்களை மேதகு ஆயர் அவர்கள் சந்தித்தார்கள்.

20-08-13 அன்று காலை மறைமாவட்ட கல்வி குழு கூட்டம் மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது.

21-8-13 அன்று காலை ஆலந்தலை திருவிழா கொடியேற்றம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

22-8-13 அன்று காலை 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் குருப்பட்டம் பெற்ற குருக்களை மேதகு ஆயர் அவர்கள் சந்தித்தார்கள்

23-8-13 அன்று மாலை சிந்தாமணி ஆலய அர்ச்சிப்பு திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

24-8-13 அன்று காலை சோமநாதபேரி பங்கு வடக்கு இளங்குளம் ஆலய அர்ச்சிப்பு திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது

நன்றி-மறைமாவட்ட செய்திகள்



# பங்குசெய்திகள்

3-8-13 அன்று முதல் சனி வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றது.

உத்ரகாண்ட் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக 28-7-13 ஞாயிறு அன்று கோயிலில் பிரிக்கப்பட்ட காணிக்கை ரூ 8845, அன்பியங்கள் மூலம் பெறப்பட்ட ரூ 1800 பக்தசபைகள் மூலம் பெறப்பட்ட ரூ 1050 ஆக மொத்தம் ரூ 11,695 மறைமாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

4-8-13 நடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பங்குப்பேரவை கூட்டத்தின் பயிற்சி பாசறையில் மறைமாவட்ட ஆயர் அவர்களின் பங்குப்பேரவை பற்றிய விளக்கமும் கொடுக்கப்பட்டது. இதில் பங்கு பெற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் பாராட்டுகள்

12-8-13 அன்று நமது ஊர் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் 11ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு அரசின் விலையில்லா சைக்கிள் தாளாளர் தந்தை அவர்களால் வழங்கப்பட்டது.

15.08.13 அன்று திருக்கல்யாண அன்னையின் விண்ணேற்புப் பெருவிழா, நாட்டின் 67 வது சுதந்திரதினவிழா பங்கிலும், பள்ளிகளிலும் கொண்டாடப்பட்டது. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் முப்பள்ளிகள் சார்பாக கொடியேற்றி மரியாதை செய்யப்பட்டது. தாளாளர் தந்தை அவர்கள் தலைமையில் பஞ்சாயத்து தலைவர், பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தலைவர் மற்றும் ஊர் பொதுமக்கள் , முன்னாள் மாணவ மாணவியர்கள், இளைஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். முப்பள்ளிகளின் சார்பாக கலைநிகழ்ச்சிகள் மாணவ, மாணவியரால் சிறப்பிக்கப்பட்டது.

செபஸ்தியார் கெபி காணிக்கைப்பெட்டி உபயம் செய்த திரு.டொமினிக் ராஜன், திரு.அருள் செல்வன் ஆகியவர்களுக்கு நன்றியும் பாராட்டுகளும்.

ஆலயத்தில் புதியதாக மின்விசிறி வாங்கி பொருத்துவதற்கு திரு.செல்வின் ஜெஸ்லின் குடும்பத்தார் ரூ.10,000மும் திரு.சந்தன லூக்காஸ் குடும்பத்தார் ரூ.15000மும் நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். இவர்களுக்கு நன்றியும் பாராட்டுகளும்.

மாதந்தோறும் முதல்சனிக்கிழமைகளில் காலை பொங்கல், குளிர்பானம் மற்றும் பால் வழங்கும் நல்ல உள்ளங்களுக்கு நன்றியும் பாராட்டுகளும்.




# என் ஆன்மா இறைவனையே ஏற்றிப் போற்றி மகிழ்கின்றது

லூக் 1-47 ஆண்டவரை எனது உள்ளம் போற்றி பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது என்று இறைவனை அன்னை மரியாள் போற்றித் துதிக்கின்றாள். அதே போன்று இறைவனை நாமும் போற்றித் துதிக்கும் போது இறைவன் நம்மிடையே வருகின்றார். இறைவன் வரும்போது, காரிருள் விலகி வெளிச்சம் வருகிறது; விடுதலை கிடைக்கின்றது. இறைவனை நாம் போற்றித் துதிக்கும் போது நன்மைகளும், ஆசீர்வாதங்களும் நமக்கு கிடைக்கிறது.

(அப் 16-16) பவுலும், சீலாவும் இறைவேண்டல் செய்யும் இடத்திற்குப் போனார்கள். அங்கு குறி சொல்லும் அடிமைப்பெண் ஒருவர்வசம் இருந்த குறி சொல்லும் அசுத்த ஆவியை பவுல் எரிச்சல் கொண்டு விலகச் செய்தார். அந்தப் பெண்ணை வைத்து தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொண்டிருந்தவர்கள் பவுலையும், சீலாவையும் தலைமை நடுவர்கள் முன் நிறுத்தி அவர்களை சிறையில் அடைத்து நொறுக்கி சித்திரவதைக்குள்ளாக்கினார்கள். பவுலும் சீலாவும் எந்தத் தவறும் செய்யவில்லை.

(அப் 16-25) நள்ளிரவில் பவுலும், சீலாவும் ஆண்டவரைப் போற்றி புகழ்ந்து பாடி ஜெபித்தார்கள். அப்போது சிறைக்கூடமே அதிர்ந்தது. உடனே அடைக்கப்பட்டிருந்த கதவுகள் அனைத்தும் திறந்தன. கைவிலங்குகளால், சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்த அவர்களின் கட்டுகளும் கழன்று விழுந்தன.

இன்றைக்கும் நொறுங்கிப் போன உள்ளத்தோடு திருக் கல்யாணமாதாவின் ஆலயத்திற்கு வந்திருக்கின்றீர்களா? அன்று பவுலும் சீலாவும் நொறுக்கப்பட்ட உள்ளத்தோடும், உடலோடும்தான் ஆண்டவரைப் போற்றிப்பாடித் துதித்தார்கள். அந்த நிலையிலும் பவுலும், சீலாவும் ஆண்டவரைப் போற்றிப்பாடித் துதித்திருக்க முடியுமானால் நம்மாலும் ஆண்டவரைப் போற்றிப் பாட முடியும். ஆகவே எந்தச்சூழ்நிலையிலும் ஆண்டவரைப் போற்றுங்கள்;ஜெபியுங்கள். உங்கள் வாழ்விலும் அடைக்கப்பட்ட கதவுகள் திறக்கப்படும்; வழி பிறக்கும்; கட்டுகள் கழன்று போகும். பிசாசின் தந்திரங்கள், மந்திர மாயங்கள், பாரம்பரியங்கள் தவறான நம்பிக்கைகள்,மூடப் பழக்க வழக்கங்கள் விலகிவிடும். பேய் பிடித்து கட்டப்பட்ட மனிதர்கள் கட்டவிழ்ந்து விடுதலை பெறுவர்.

ஏனெனில் மனிதனின் கட்டுகளை அவிழ்க்க இயேசுவால் முடிந்தது. லூக் ( 13-11 ) 18 ஆண்டுகளாக தீய ஆவி பிடித்து நிமிர முடியாத கூனிப் பெண்ணை சாத்தானின் கட்டிலிருந்து அவிழ்த்து விட்ட இயேசு அவளுடைய நோயைக் குணமாக்கினார்.

R.மெர்சி அமலி-சென்னை

# மகா அன்புக்குப் பாத்திரமாயிருக்கிற மாதாவே

"தன்னகத்தே நன்மை கொண்டதாய் ஒன்று இருக்கிறது
என்றால் அது அன்பு தவிர வேறொன்றுமில்லை".



பொதுவாக நம் பழக்க வழக்கங்களில் ஒன்று கடிதம் எழுதுவது. நம் கடிதங்கள் அன்பைத் தாங்கிச் செல்லும் ஒரு ஊடகம். ஏனெனில் நம் கடிதங்களில் ஆரம்பத்தில் 'அன்புக்குரிய' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதை இன்றும் நம் வழக்கத்தில் வைத்திருக்கின்றோம். இதன் பொருள் என்ன? நாம் கடிதத்தில் குறிப்பிடும் அந்தக் குறிப்பிட்ட நபர் நம்'அன்புக்கு உரியவர்' அதாவது 'தகுதி கொண்டவர்' என்பது தானே இதன் பொருள்.இது அன்னை மரியாவுக்கு எப்படி பொருந்தும்? அன்னை மரியா 'அன்புக்குரியவர்'என்றால் நம் அன்புக்கு உரிமை உடையவர் என்றும் பொருள் கொள்ளமுடியும். அப்படியானால் அன்னை மரியா எதனால் அல்லது எந்த வகையில் நம் அன்புக்கு உரியவர்? நம் அன்பில் அவருக்கு உரிமை இருக்கின்றதா? ஆம் என்பது தான் மனித குலத்தின் ஒருமித்த பதிலாக இருக்கிறது. அதற்கு காரணங்களும் உண்டு. அதென்ன? என்பதை ஒன்றாக அதாவது ஒருமித்த மனநிலையில் தியானிப்போம்.

**அன்னைஅன்பின்பிரதிபலிப்பு :**

"அன்பென்பது ஒரு இறையியல் பண்பு
அதில்தான் உள்ளது மனிதனின் மாண்பு"

இது தூய பவுலடிகளாரின் (1 கொரி 13 ) வார்த்தைகளை அடிப்படையாக வைத்து இசைக்கப்பட்ட ஒருபாடலின் வரிகள். இந்த இறையியல் பண்பை (அன்பு) முழுமையாக வெளிப்படுத்திச் செயல்படுத்தும் யாவரும் கடவுளின் நெருங்கிய உறவில் பங்கெடுக்கிறார்கள், கடவுள் சாயலை உணரச் செய்கிறார்கள்.யார்? யார்? கடவுளின் நெருங்கிய உறவில் பங்கெடுத்தவர்கள் என நாம் அட்டவணைப்படுத்த முனைந்தால் பல பெயர்களை எழுத முடியும். அவ்வாறு எழுதும் போது நம் மனதில் உடனே தோன்றும் பெயர் நம் அன்னை மரியின் பெயர்தான். ஏன்? கடவுள் எனும் சூரியனிலிருந்து மரியா எனும் சந்திரன் முடிந்த மட்டும் அன்பெனும் ஒளியைக் கிரகித்து உள்வாங்கி அதை தேவைப்பட்ட நேரத்தில் அதாவது மனித மீட்புக்குப் பயன்படுத்தும் வகையில் செயல்படுத்தியது. இவ்வாறு அன்னை அன்பின் பிரதிபலிப்பாய் ஜொலித்ததே இதற்குக்காரணம். அடிப்படையில் கடவுளை அன்பு செய்தார் மரியா. ஆகவே மனித குலத்தின் அன்புக்குரியவரானார் அல்லது அன்பிற்கு பாத்திரமானார். இவரின் அன்பு பிரதிபலிக்கிறதென்றால் எப்படி வெளிப்படையாக அறியமுடியும் ? என்ற கேள்விக்கு விவிலியம் விரைந்தோடி வந்து பதில் தருகிறது.

# திருச்சிலுவை மகிமைப் பெருநாள் !

**முன்னுரை:**

சிலுவை என்பது ஆயுதம் அல்ல ! என்றும் அழிபடாத வாழ்வளிக்கும் மீட்பின் சின்னம் திருச்சிலுவை! ஆயுதம் தாங்குவோர் பகையை வெல்கின்றார். திருச்சிலுவையை தாங்குவோர் தம்மையே வெல்கின்றார்.

**திருச்சிலுவை மகிமைப்பெருநாள்:**

நமதாண்டவர் இயேசுவின் தூய சிலுவையை மகிமைப்படுத்தும் பொருட்டு, நம் தாய் திருச்சபை செப்டம்பர் திங்கள் 14 ம் நாளை திருச்சிலுவை மகிமைப் பெருநாளாக அனுசரித்து வருகின்றது. இயேசு அமர்ந்த தூய சிலுவையை பகைவர்கள் அழிக்க தேடிய போது , அத்தூய சிலுவை எவர் கண்ணிலும் படாமல் மறைந்து போனது. பின் அத்தூய சிலுவை கண்டுபிடிக்கப்பட்டு கொனஸ்தாந்தி – நோபிள் நகரில் வெற்றியாக உயர்த்தப்பட்ட திருநாளே, திருச்சிலுவை மகிமைப் பெருநாள்!

**திருச்சிலுவை மகிமைப்படுத்தப்படும் நேரம் :**

தூய திருச்சிலுவை மகிமைப்படுத்தப்படும் நேரம் தீய சக்திகள் அழிக்கப்படும் நேரம்! தடைகள் அகற்றப்படும் நேரம்! நம்மில் உள்ள தீய பழக்க, வழக்கங்கள் அழிக்கப்பட்டு, நம் ஆன்மாவை பாவம் அணுகாமல் காக்கப்படும் நேரம்! நம் வாழ்வு வளம் பெறும் நேரம்! பணிவிடை பெறுவதற்கு அல்ல! பணிவிடை புரியவே வந்தேன் என்பதற்கேற்ப வாழ்ந்த இயேசு, என்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து ,தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும் ( மத்தேயு– 16:24 ) என்று கூறுகின்றார். இயேசுவின் சீடர்கள், இயேசுவின் போதனையின் படி நடந்து, திருச்சபையின் முதல் அப்போஸ்தலர்கள் என்னும் சிறப்பு பெற்றார்கள்.தூய சவேரியார் தூய அந்தோனியார் முதலான புனிதர்கள் திருச்சிலுவையின்பால் மட்டில்லா அன்புகொண்டு அதன் வல்லமையால் தீய சக்திகளை விரட்டி, அற்புதங்கள் பல புரிந்தார்கள். அதன் பலனாக தம்மையே வென்று புனிதர் ஆனார்கள்.அவர்களின் வழித்தோன்றல்களான நம் வாழ்வும் திருச்சிலுவையால் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். ஆகவே நமக்கும் புனித வாழ்க்கை வாழ அழைப்பு விடுக்கின்றது இத்திருச்சிலுவை மகிமைப் பெருநாள்!

**சின்ன எருசலேம் :**

தூத்துக்குடி மறை மாவட்டத்தில், மணப்பாடு எனப்படும் மணவை குன்றில் கட்டப்பட்டுள்ளது திருச்சிலுவை ஆலயம், தமிழகத்தில் தூய திருச்சிலுவைக்கு எழுப்பப்பட்ட முதல் கற்கோயில் என்னும் சிறப்பு பெற்றது. இயேசு சுமந்த மெய்யான தூய சிலுவையின் இரு சிறு பகுதிகள் சிலுவை வடிவில் இணைக்கப்பட்டுஇவ்வாலயத்தில் வைத்து இன்றும் ஆராதிக்கப்பட்டு வருகின்றது. ஆண்டவர் இயேசுவின் வாழ்வை சித்திகரிக்கும் புனித பூமி எருசலேம். இயேசுவின் பாடுகளை தியானிக்கும் வண்ணம் மணவை குன்றில் மீது எழுப்பப்பட்டுள்ள 14 குருசுகள் இப்புண்ணிய பூமியை நினைவுபடுத்துகின்றன. இதனால் இத்திருத்தலம் பாப்பிறை 13 ம் சிங்கராயர் இவர்களால் சின்ன எருசலேம் என அழைக்கப்படும் சிறப்பினைப் பெற்றுள்ளது.

**முடிவுரை :**

மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன ? (மத்தேயு– 16:26) என்ற இயேசுவின் வாக்கினை உணர்ந்து நம் ஆன்மாவை பாவம் அணுகாமல் காத்திட,தீயன அகன்று நிறை வாழ்வை அடைந்திட, புனித வாழ்க்கை வாழ்ந்திட தூய சிலுவையை வணங்கிடுவோம் ! திருச்சிலுவைக்கே மகிமை !

**M.** மிக்கேல் உஷா. பொற்பை.

# இளைஞர்களின் வழிகாட்டி

"நல்ல மரம் நல்ல கனியைக் கொடுக்கும்"

1813-ஆம் ஆண்டு ஏப்ரல் 23-ம் நாள் பாரீசின் மிலான் நகரில் சிறந்த கத்தோலிக்கக் குடும்பத்தில் ஐந்தாவது மகனாக பிறந்தவர்தான் அந்தோனி பிரடரிக் ஓசானாம்.

1831-ல் ஓசானாம் பாரீஸ் நகரின் சட்டக்கல்லூரி மாணவன். அப்போது அவருக்கு வயது பதினெட்டு. பிரெஞ்சு புரட்சிக்கு பின் கத்தோலிக்க மறையின் விசுவாசம் தத்தளித்துக் கொண்டிருந்த காலம் அது. இறையுணர்வு மிக்க ஓசானாம் தம்மையொத்த ஐந்து மாணவர்களைக் கொண்ட குழு ஒன்று அமைத்து தன் பேச்சாலும், எழுத்தாலும் திருமறையின் விசுவாசத்தைக் காக்க முயற்சிகளை மேற்கொண்டார்.

ஒருவன் போதிய உடையும் அன்றாடஉணவும் இல்லாதிருக்கும் போது அவர்களுக்கு தேவையான எவற்றையும் கொடாமல் நலமே சென்று வாருங்கள் பசியாற்றிக் கொள்ளுங்கள் என்போமானால் அதனால் என்ன பயன்? (யாக் 2:15,16) ஆம் திருமறையில் விசுவாசம் கொள்வதும் அதைப் பாதுகாப்பதும் மட்டும் போதுமானதல்ல .நற்செய்தியின் தேவனை ஆராதிப்பது மட்டும் போதுமானதல்ல. போதனையை விட சாதனையே மேல் என்ற முடிவுக்கு வந்தார் ஓசானாம். ஏழை மக்களுக்குத் துணை செய்வதே தம் வாழ்வின் குறிக்கோள் எனக் கொண்டு தம் மாணவ நண்பர்கள் ஐவருடன் சேர்ந்து 1833-ஆம் ஆண்டு இன்று உலகமெங்கும் அன்புப் பணி செய்யும் புனித வின்சென்ட் தே பவுல் சபையைத் தொடங்கினார்.



காளைப் பருவத்தில் கலைகள் பல கற்றுத் தேர்ந்து கல்லூரி மாணவர் தலைவனாய்த் திகழ்ந்து மாணவர் மத்தியில் திருமறைக் காவலனாய் ஒளிர்ந்து பிறரன்புப் பணியாற்றிய ஓசானாம் இன்றைய இளைஞர்களுக்கு சிறந்த வழிகாட்டி.

1841-ஆம் ஆண்டு துன்புறு வோரின் துயர் துடைப்பதில் ஆர்வம் கொண்ட எமிலி என்ற மங்கையை மணந்து கொண்டார். 13 ஆண்டு இல்லற வாழ்வில் தனது அன்பு பணிக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் ஆலோசனையும் வழங்கிய தம் மனைவியை ஒரு காவல் சம்மனசு என்று ஓசானாம் குறிப்பிடுகிறார்.

1853-ஆம் ஆண்டு செப்டம்பர் 8ம் நாள் நம் அன்னை மரியாள் பிறந்தநாள் அன்று இறைவன் ஓசானாமை விண்ணுலகிற்கு எடுத்துக் கொண்டார். அவரது 40 ஆண்டு கால வாழ்வு உலகை வியக்கச் செய்துள்ளது. கடுகு மணியொப்பத் தொடங்கிய சபை பெரிய மரமாகி உலக நாடுகள் தோறும் பரவியுள்ளது.ஓசானாமைத் தேர்ந்து கொண்ட இறைவன் அவர் வழியாகத் தொடங்கிய சபையில் இளைஞர்களான உங்களையும் பணியாற்ற அழைத்து உள்ளார் என்பதை எண்ணி மகிழ்வீர். பிறரன்புப் பணி மூலம் நற்செய்தி பணியாற்ற விரைந்திடுவீர்.

– வின்செந்தியன்




# நல்ல மனிதனை தயாரிப்பது எப்படி?

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| தெய்வ பக்தி | - 25% |
| ஒழுக்கம் | - 20% |
| அறிவு | - 20% |
| தன்னம்பிக்கை | - 15% |
| நாட்டுப்பற்று | - 10% |
| கலாச்சாரம் | - 5% |
| தைரியம் | - 5% |
| பேச்சுத்திறமை | - தேவையான அளவு |
| பணம் | - அலங்கரிக்க |

**செய்முறை:**

தெய்வ பக்தியையும், ஒழுக்கத்தையும் ஒன்றாக மனதில் ஊறவைத்தப் பின் அதில் அறிவைக் கலந்து நன்கு பிசையவும், அதனுடன் தன்னம்பிக்கையையும் சேர்த்து நாட்டுப்பற்றையும் ஊற்றி வாணலியை சூடாக்க ( சிந்தனையை உறுதிப்படுத்த ) வேண்டும். பிறகு முதலில் பிசைந்து வைத்த கலவையுடன் கலாச்சாரத்தையும் சேர்க்கவும். நன்கு வறுபட்ட பின் அடுப்பை அணைத்து விட்டு ( மனதை பக்குவப்படுத்தியபின் ) அத்துடன் தேவையான அளவு பேச்சுத்திறமையை சேர்த்துக் கொள்ளவும். நன்கு கிளறப்பட்ட கலவையுடன் பணத்தை சேர்த்து அலங்கரித்தால் 100% நல்ல மனிதன் தயார். உடனே எடுத்து சமுதாயத்திற்கு பயன்படுத்தலாம் (பரிமாறலாம்).

**பின் குறிப்பு:**

அடுப்பை அணைக்காமல் ( மனதைபக்குவப்படுத்தாமல்) பேச்சுத்திறமையைச் சேர்த்தால் வேண்டாத ருசியைத் தரும்.

திருமதி. விஜிதனசேகர், தூத்துக்குடி -1

---

## இந்திய நகரங்கள்




- ★ பொற்கோவில் நகரம் – அமிர்தசரஸ்
- ★ அரண்மனை நகரம் – கொல்கத்தா
- ★ இந்தியாவின் பூந்தோட்டம் – பெங்களூர்
- ★ இந்தியாவின் நுழைவுவாயில் – மும்பை
- ★ இந்தியாவின் மான்செஸ்டர் – மும்பை
- ★ இளஞ்சிகப்பு நகரம் – ஜெய்ப்பூர்
- ★ அரபிக்கடலின் அரசி – கொச்சி
- ★ இந்தியாவின் நறுமணத் தோட்டம் – கேரளா
- ★ பஞ்ச நதிகளின் நிலம் – பஞ்சாப்
- ★ கிழக்கின் ஸ்காட்லாந்து – மேகாலயா
- ★ ஏழு தீவுகளின் நகரம் – மும்பை
- ★ இந்தியாவின் விளையாட்டு மைதானம் – காஷ்மீர்
- ★ பாறை நகரம் – சண்டிகர்
- ★ இந்தியாவின் ஆபரணம் – மணிப்பூர்
- ★ வ ட இந்தியாவின் மான்செஸ்டர் – கான்பூர்
- ★ இந்தியாவின் கோவில் நகரம் – புவனேஷ்வர்
- ★ கீழை நாடுகளில் வெனிஸ் – ஆலப்புழை

தொகுப்பு – ஜெரின், பொற்பை

# திருக்கல்யாணத் தாய் திருத்தல முதல்சனி வழிபாடு



# (3.8.2013)

திருக்கல்யாணத்தாய் திருத்தலத்தில்

ஆகஸ்ட் மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 3.08 2013 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு.**ஜஸ்டின்**அடிகளார், குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துகள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. அருட்திரு. **இருதயராஜா** அடிகளார், அவர்கள் தலைமையில், பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** அருட்திரு. **ராஜா,** அருட்திரு.**போஸ்கோ,** அருட்திரு. **பீட்டர் ராஜா,** அருட்திரு. **ஆரோக்கிய ராஜ்,** அருட்திரு.**ஜஸ்டின்,** அருட்திரு.**டேவிட்**, அருட்திரு.**கிராசியஸ்**, அருட்திரு.**ஜியோ**,அருட்திரு.**பீட்டர்பால்**,

திருத்தொண்டர் **டேவிட் வளன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு.**ஜஸ்டின்** அடிகளார், மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து **150** வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **12500** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், குழந்தைகளுக்கு பாலும் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறைஇரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதைத் திருத்தொண்டர் **டேவிட் வளன்** வழி நடத்தினார்கள். அதன்பின்பு பங்குத்தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்** தலைமையில் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலியும் அதன்பின் சிறப்புமாலை ஆராதனையும் நடைபெற்றது.

**– திருத்தல அதிபர்**



## நன்றிகள் பலகோடிகள் 03.08.2013 முதல்சனி உணவு நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| சேனியா விசைப்படகு (தூத்துக்குடி) | 4000.00 |
| அந்தோணி பாஸ்கர் (பொற்பை) | 500.00 |
| D.ரோஸ் சேவியர் (சென்னை) | 2000.00 |
| சூசை மாணிக்கம் (மும்பை) | 1000.00 |
| பிரவின் (சொக்கன் குடியிப்பு) | 1500.00 |
| S.K.ராஜ் (பொற்பை) | 200.00 |
| சேசுராஜன் பெசிட்டா (மணப்பாடு) | 500.00 |
| பெஜிலா (கண்டன்குளம்) | 2000.00 |
| லூக்காஸ் மளிகை திருப்பூர்) | 1000.00 |
| ராஜேந்திரன் (பொற்பை) | 100.00 |
| கிளமண்ட் ஜேயசீலன் (பாளை) | 500.00 |
| சேகர் (பொற்பை) | 1000.00 |
| செல்லத்துரை (பொற்பை) | 1000.00 |
| ஜெபஸ்டின் ரெனிஷா (மதுரை) | 500.00 |
| அந்தோணி பிலவேந்திரன் (பொற்பை) | 200.00 |
| அந்தோணி செல்வன்(சாத்தை) | 1000.00 |
| ராஜ் (பொற்பை) | 300.00 |
| ஜெரின் ஸ்டோர் (உடன்குடி) | 500.00 |
| அந்தோனி ராஜ் (பொற்பை) | 500.00 |
| முருகேஷன் (நரையன் குடியிருப்பு) | 1000.00 |
| சூசை செசன் ராஜ் (பொற்பை) | 300.00 |
| ஜெகலிஸிகம் | 2500.00 |
| பற்பநாதன் (நாகர்கோவில்) | 500.00 |
| பிரமோத் (புதுக்குறிச்சி) | 500.00 |
| ரசரத்தினம் (மண்டக்காடு) | 1000.00 |
| குணசேகரன் (திருச்செந்தூர்) | 200.00 |
| ஏசுவடியான் (பொற்பை) | 100.00 |
| ஜேசுராஜ் (திருச்செந்தூர்) | 200.00 |
| பதுவா டிராவில்ஸ் (மணப்பாடு) | 700.00 |
| சுரேஷ் பாண்டியன் (பொற்பை) | 100.00 |
| எட்வர்ட் லாரன்ஸ் (பொற்பை) | 500.00 |
| சித்ரா தேவி (கோவில் காடு) | 500.00 |
| பாக்கியராஜ் (பிரகாசபுரம்) | 100.00 |
| திவ்யா வினோத் (பொற்பை) | 2500.00 |
| மேரி (பொற்பை) | 100.00 |
| மரியதாஸ் (மீனவன்குளம்) | 200.00 |
| இக்னேஷியஸ்(கோவிளம்) | 400.00 |
| வில்டன் விஜி (புத்தன் துறை) | 450.00 |
| ஜோசப் (கோவளம்) | 100.00 |
| மகாராஜ் எலக்ட்ரீக்கல்ஸ் (கோயம்புத்தூர்) | 500.00 |
| பிரவீன் (கோயம்புத்தூர்) | 500.00 |
| அன்னை ஆரோக்கிய மாதா மில்ஸ் (கோயம்புத்தூர்) | 500.00 |
| அந்தோணி ராசையா (ஈரோடு) | 100.00 |
| சுபா ஜீவா (சாத்தை) | 500.00 |
| காட்வின் சகாய ஜெனிபர் (இணையம்) | 200.00 |
| அந்தோணி ஜெஸிந்தா (மார்த்தாண்டம் துறை) | 500.00 |
| ஜேசுதாசன் (பொற்பை) | 200.00 |
| மொத்தம் | 33250.00 |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| எட்வின் காமராஜ் டெய்ஸிராணி சாப்பாடு பிளேட் | 10,000 |
| கென்னடி கலா (தூத்துக்குடி) | அரிசி 25 கிலோ |
| மனோஜ் (கொம்புத்துறை) | அரிசி 50 கிலோ |
| சந்தியாகு (உவரி) | அரிசி 50 கிலோ |
| பெயர் விரும்பாத நபர் | அரிசி 300 கிலோ |
| ஜோசப் செல்வராஜ் (ஈரோடு) | அரிசி 100 கிலோ |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | அரிசி 100 கிலோ |
| M.S.R. ஜஸ்டின் (சென்னை) | அரிசி 100 கிலோ |
| ஜரோம் குயிண்டின் (கவரப்பேட்டை) | அரிசி 100 கிலோ |
| ரூபி ஸ்டோர் (பொற்பை) | அரிசி 50 கிலோ |
| சூசை மிக்கேல் (கோவை) | அரிசி 50 கிலோ |
| ஜெரால்டு ரவி (மும்பை) | அரிசி 50 கிலோ |
| ராஜேஷ் அமலா (பொற்பை) | அரிசி 50 கிலோ |
| பிரான்ஸிஸ் குடும்பம் (இணையம்) | அரிசி 25 கிலோ |
| துரை (கோயம்பேடு) | மாங்காய் 10 கிலோ |
| ரவீஸ்டர் (பொற்பை) | தக்காளி 12 பெட்டி |
| | உருளை 4 மூட்டை |
| | பெ.வெங்காயம் 4 மூட்டை |
| | சி.வெங்காயம் 1 மூட்டை |
| | கருணைகிழங்கு 60 கிலோ |
| | கேரட் 1 மூட்டை |
| | ப.மிளகாய் 1 மூட்டை |
| ராஜேந்திரன் (பாளை) | அரிசி 100 கிலோ |
| மெர்லின் சிபு (உடையார் குடியிருப்பு) | தேங்காய் 15 |
| படிசாறியே (ராஜாக்கமங்கலம் துறை) | அரிசி 25 கிலோ |
| ஜான்சன் (ராஜாக்கமங்கலம் துறை) | அரிசி 25 கிலோ |
| ரமேஷ் நவமணி (மணப்பாடு) | 1 மூடைதண்ணீர் |
| ஜேசு அருளப்பின் (கூத்தங்குளி) | அரிசி 25 கிலோ |
| அந்தோணி ராஜ் (விருது நகர்) | சமையல் எண்ணெய் 3பாக் |

## முதல் சனி செலவு விபரம் 03.08.2013

| | |
|---|---:|
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 400.00 |
| யோவான் சமையல் | 13,000.00 |
| அலெக்ஸ் விறகு 50 எடை | 6750.00 |
| சேசு ஜெயராஜ் மற்றும் பணியாளர்கள் | 3000.00 |
| பேச்சியம்மாள் தூய்மைபணி | 2500.00 |
| ஜஸ்டின் மின்னல் தண்ணீர் மூடை 119 | 6307.00 |
| ஜோசப் மளிகை | 55796.00 |

| | |
|---|---|
| இருதயராஜ் ரூபிஸ் ஸ்டோர் 3 மூடை அரிசி | 9600.00 |
| ஜெயக்குமார் டிராக்டர் | 1250.00 |
| வின்செண்ட் உணவு விடுதி | 1312.00 |
| இம்மான் வண்டி வாடகை | 1625.00 |
| ஜாண் வண்டி வாடகை | 100.00 |
| தேவ அமிர்தராணி செங்கல் 100 | 600.00 |
| மொத்தம் செலவு | 1,02,240.00 |

## முதல்சனி மதியஉணவு வரவுசெலவு விபரம்

### வரவு சுருக்கம்

| | |
|---|---|
| முன்னிருப்பு வங்கியில் | 22,466.00 |
| கையில் | 77.00 |
| நன்கொடை மூலம் வரவு | 33,250.00 |
| முதல்சனி ஏலப் பொருள்கள் | 13,215.00 |
| ஜோஸ் குடும்பத்தார் வங்கியில் | 3,000.00 |
| திருத்தலக்கடை இருப்பு பணத்தில்இருந்து முதல்சனி உணவு வகைக்குக் கொடுத்து | 56,000.00 |
| மொத்த வரவு | 1,28,008.00 |
| மொத்த வரவு | 1,28,008.00 |
| மொத்த செலவு | 1,02,240.00 |
| இருப்பு | 25,768.00 |

### இருப்பு விபரம்

| | |
|---|---|
| வங்கியில் | 25,466.00 |
| கையில் | 302.00 |
| மொத்தம் | 25,768.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 30.06.13 அன்று இருப்பு | 351852.00 |
| 01.07.13 முதல் 31.07.13 வரை விற்பனை | 116966.00 |
| மொத்தம் | 468818.00 |
| 01.07.13 முதல் 31.07.13 வரை செலவு | 92335.00 |
| இறுதி இருப்பு | 3,76,483.00 |

–திருத்தலக்கடை நிர்வாகிகள்

## அதிதூதர்கள் : புனித மிக்கேல்,

மிக்கேல் என்ற எபிரேயச் சொல்லுக்கு“கடவுளுக்கு நிகர் யார்?”என்று பொருள்.விண்ணகத்தில் இறைத்தூதர்களின் நடுவே குழப்பம் தோன்றியது நல்ல தூதர்கள் எல்லோரும் அதிதூதரான புனித மிக்கேலின் தலைமையில் “ கடவுளுக்கு நிகர் யார்?’’என்று சொல்லிக் கொண்டு இறைவனுக்கு எதிராக எழுந்த லூசிப்பேயையும் அவன் தோழர்களையும் நரகத்தில் தள்ளினர்.

தொடக்கக் காலத்தில் கிறிஸ்தவர்கள் நோயாளிகளை இந்த தேவதூதரிடத்தில் ஒப்படைப்பது வழக்கம். “கொலசே என்ற இடத்தில்
இவர் பெயரால் ஒரு புதுமையான நீர் அருவி இருக்கிறது. புனிதரின் பெயரை உச்சரித்துக்கொண்டு மூவொரு கடவுளின் உதவியை நாடி
இந்த அருவியில் நீராடிய நோயாளிகள் நலமடைந்தனர். சாத்தானை வெல்வதும், திருச்சபையின் பாதுகாவலராய் இருப்பதும்,மனிதர் இறந்தபின் அவர்களின் ஆன்மாவைத் தனித்தீர்வைக்குஇறைவனிடம் கொண்டுபோய் சேர்ப்பதும் இவருக்கு உரித்தான வேலைகள்.இவர் பாப்பரசரின் காவல் தூதராகவும்.திவ்ய நற்கருணையின் பாதுகாவலராகவும் இருப்பதாக பாரம்பரியம் கூறுகிறது.‘அதிதூதரான புனித மிக்கேலே”என்ற அருமையான ஜெபத்தை அடிக்கடி பக்தி உருக்கத்துடன் சொல்லப் பழகுவோம்.

– **பாத்திமா,** பொற்பை

## புனித கபிரியேல்,

கபிரியேல் என்றால் இறைவனின் பலம் என்று பொருள் கடவுள் தனது வல்லமையையும், மகிமையையும் காட்டுவதற்கு இந்த தூதுவரையே பயன்படுத்தினார். இரட்சகரின் வருகையை முன்னறிவித்தவர் இவரே. பழைய ஏற்பாட்டில் இவரது பங்களிப்பு நிறைய உண்டு. கபிரியேல் எவ்வளவு மகிமையுடனும் மாட்சிமையுடனும் இருந்தார் என்றால், இவரைக் கண்டதும் தானியேல் நடுங்கி முகம் குப்புற விழுந்தான் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்து அரசர் வர இத்தனை காலங்கள் பிடிக்கும் என்பதை தானியேலுக்கு அறிவித்தவரும் இவரே

– **சுஷ்மி,** பொற்பை

## புனித இரபேல்

எபிரேய மொழியில் இரபேல் என்பதற்கு கடவுள் குணமளிக்கிறார் என்பது பொருள்.தோபியாஸ் நூலில் சொல்லப்படுவது. போல் ,கடவுளின் முன் எப்போதும் நின்று கொண்டிருக்கும் ஏழு தூதர்களில் இவரும் ஒருவர். பழைய ஏற்பாட்டில் பெரிய தோபியாஸ் பார்வை இழந்த போது,இவர் புதுமையாக குணமாக்கினார் என்றும்,அவரின் மகனுக்கு நீண்ட பயணத்தில் வழித்துணை யாகச் சென்றார் என்றும் கூறப்படுகிறது.எனவே இவர் பயணிகளின் பாதுகாவலராக கருதப்படுகிறார்.நற்செய்தியில் புரோபாத்திக்கா என்ற குளத்தில் சில குறிப்பிட்டவேளைகளில் வந்து தண்ணீரைகலக்கியதாகக் கூறப்படும் தேவதூதர் இவர்தான்.கீழைத்திருச்சபையில் கி.பி 1000 வது ஆண்டிலிருந்து திருவழிப்பாட்டில் இவர் நினைவு கூறப்படுகிறார். எனவே நோயாளிகளுக்கும்,பயணிகளுக்கும் பாதுகாவலராக இவரை நாடி இவரது உதவியை நாடுவோம்.

– **ஜெரோஸ்,**பொற்பை

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639 - 261230 , 261330**

**03-08-2013 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | ! | 1800 பேர் |
| குழந்தைபாக்கியம் | ! | 1751 பேர் |
| சுகப்பிரசவம் | ! | 1473 பேர் |
| நற்சுகம்பெற | ! | 2143 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | ! | 1527 பேர் |
| தேவஅழைத்தல் | ! | 979 பேர் |
| வேலைகிடைக்க | ! | 1841 பேர் |
| தொழில்முன்னேற்றம் | ! | 2519 பேர் |
| குடும்பசமாதானம் | ! | 1802 பேர் |
| குடும்பநலன் | ! | 2186 பேர் |
| உறவினர்நன்மைக்காக | ! | 1697 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | ! | 1932 பேர் |
| அலகைதொல்லைதீர | ! | 1764 பேர் |
| மனஅமைதிக்காக | ! | 1985 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | ! | 1457 பேர் |
| மனமாற்றமடைய | ! | 1958 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | ! | 1833 பேர் |
| நல்லஇல்லம்அமைய | ! | 1799 பேர் |
| சோதனைகளைவெல்ல | ! | 1930 பேர் |
| கடன்தொல்லைதீர | ! | 2012 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | ! | 798 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**உங்கள் ஜெப உதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

– பங்குத்தந்தை

## விஞ்ஞான கண்டுபிடிப்பு

**கைக் கடிகாரம்:**

ஜெர்மனியின் பீட்டர் ஹென்லீன், 1504 ஆம் ஆண்டு கண்டுபிடித்தார்.

**ஒலி பெருக்கி:**

அமெரிக்காவைச் சேர்ந்த ரைஸ் கெல்லாக் என்பவரால் 1924ஆம் ஆண்டு கண்டுபிடிக்கபட்டது.

**டெலிவின் கேமரா:**

விளாடிமிர் ஸ்வோரிகின் மற்றும் ஃபிலோ ஃபார்ன்ஸ்வொர்த் 1945ஆம் ஆண்டு கண்டுபிடித்தனர்.

**ஃப்ரிட்ஜ்:**

சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த கார்ல் லிண்டே என்பவரால் 1877ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

தொகுப்பு – டாப்னி, பொற்பை

# ஜீலை 2013 – வரவு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| **வரவுகள் :** | | |
| முன்னிருப்பு வங்கியில் - 3185 | | |
| கையில் - 614 | 3799.00 | |
| திருப்பலி 281X70; 70X70 | 24570.00 | |
| ஞாயிறு காணிக்கை பொற்பை - 7585 | | |
| முதலூர் - 420 | 8005.00 | |
| உத்திரகாண்ட் நிதி ஞாயிறு காணிக்கை | 8845.00 | |
| உத்ரகாண்ட் நிதி அன்பியம் மற்றும் பக்த சபைகள் | 2850.00 | |
| ஆலய உண்டியல்கள் மூலம் | 176475.00 | |
| வரிக்ள மூலம் | 55250.00 | |
| பழைய பாத்திரம் விற்பனை | 303.00 | |
| அடுப்புக்கரி விற்பனை | 500.00 | |
| திருமணம் | 550.00 | |
| அடக்கம் | 150.00 | |
| சான்றிதழ் | 10.00 | |
| தொடக்கப்பள்ளிகள் [ M.G ] | 3183.00 | |
| முத்துராமலிங்கம் நன்கொடை | 1000.00 | |
| இதர நன்கொடைகள் | 8470.00 | |
| பயணிகள் அறை வாடகை | 300.00 | |
| முதல் சனி கடைகள் | 4820.00 | |
| உபதேசியார் மூலம் ஏலவரவு | 8788.00 | |
| **மொத்தம்** | **3,07,868.00** | |
| **செலவுகள் :** | | |
| திருத்தல அறிவிப்பு விழா ஒலி ஒளி பாக்கி | | 9900.00 |
| முதல்சனி குருக்கள் படி | | 7600.00 |
| போட்டோ & ஆல்பம் | | 2000.00 |
| மேக் டி .வி விளம்பரம் | | 4000.00 |
| பங்குப் பேரவை சிற்றுண்டி | | 1391.00 |
| திருத்தல அறிவிப்பு விழா பந்தல் ஜோடனை பாக்கி | | 10000.00 |
| அருட்தந்தை ஹெனிஸ்டன் & குழுவினர் பயணப்படி | | 4000.00 |
| திருத்தல அறிவிப்பு வால்போஸ்டர் அச்சடிக்க(பெலிக்ஸ்) | | 18000.00 |
| தொடக்கப்பள்ளிகள் ரிப்பேர் பொருட்கள் & கொத்தனார்கூலி | | 17285.00 |

| | |
|---|---|
| தொடக்கப்பள்ளிகள் பெயிண்டிங் பொருட்கள் & கூலி | 27290.00 |
| மாணவர்கள் யூனிபாம் உதவித்தொகை | 1432.00 |
| ஞாயிறு மறைக்கல்வி பயணப்படி & செலவுகள் | 2388.00 |
| மேல்நிலைப்பள்ளி கரும்பலகை பெயிண்டிங் | 500.00 |
| முதல் சனி உணவு வகைக்கு கொடுத்தது | 40000.00 |
| தொலைபேசி கட்டணம் | 562.00 |
| சான்றிதழ் & படிவங்கள் | 60.00 |
| மேல்நிலைப்பள்ளி நூலக புத்தகங்கள் | 16708.00 |
| மாணவர்களுக்கு இனிப்புகள் | 250.00 |
| பிரகாசபுரம் கோவில் மண்டப நன்கொடை | 5000.00 |
| பள்ளி டிஜிட்டல் போர்டு கட்ட & அவிழ்க்க | 2000.00 |
| செய்தித்தாள் | 250.00 |
| டோபி | 535.00 |
| அருட்சகோதரர் பயணப்படி திருச்சி | 500.00 |
| எரிவாயு | 440.00 |
| பங்களாவுக்கு பாத்திரம் வாங்கியது | 545.00 |
| மீன் & மட்டன் | 1220.00 |
| பழங்கள் | 900.00 |
| பால் & தண்ணீர் | 1350.00 |
| மருந்து மற்றும் மருத்துவச் செலவுகள் | 2852.00 |
| டீசல் ஜெனரேட்டர் & வாகனம் | 6831.00 |
| செக் போஸ்ட் | 540.00 |
| உதவித் தொகைகள் | 2410.00 |
| உத்திரகாண்ட் நிதி (காணிக்கை+அன்பியங்கள்+ ப.கலை) | 11695.00 |
| காசோலைக்கு வங்கி மூலம் | 90.00 |
| பிரிட்ஜ் மற்றும் டி.வி சரிசெய்ய | 550.00 |
| டியூப்லைட் | 500.00 |
| வண்டி சரிசெய்ய | 3240.00 |
| பதிலி தந்தையர்கள் | 1700.00 |
| ஜெராக்ஸ், தபால்செலவு & இனிப்பு | 1053.00 |
| பள்ளி காம்பவுண்ட் சுவர் வழக்கு வக்கீல் கட்டணம் | 630.00 |
| ரேசன் பொருட்கள் | 388.00 |
| மளிகை பொருட்கள் | 2807.00 |
| துவக்கப்பள்ளிகள் பதிவேடுகள் | 408.00 |

| | |
|---|---|
| போர்வைகள் மற்றும் விரிப்புகள் | 1300.00 |
| டவல்கள் | 300.00 |
| மலையாள C.D | 200.00 |
| உபதேசியார் ஊதியம் | 4000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | 3000.00 |
| இரவு காவலர் ஊதியம் | 2500.00 |
| துப்புரவு பணியாளர்கள் ஊதியம் | 7000.00 |
| தொடக்கப்பள்ளி ஆசிரியர் ஊதியம் | 2000.00 |
| அருட்சகோதரர் படி | 1000.00 |
| பங்குத்தந்தை படி | 6000.00 |
| பங்குத்தந்தை திருப்பலிபடி | 1500.00 |
| புனித வரி திருப்பலி 351X5= 1755.00<br>திருமணம் 1x8 = 8.00<br>அடக்கம் 1x7 = 7.00<br>சான்றிதழ் 1x5 = 5.00<br>= 1775.00<br>திருப்பலி 321X50 = 16050.00 | 17825.00 |
| திருத்தல பங்களிப்பு | 10000.00 |
| மொத்தம் | 268425.00 |

| | |
|---|---|
| மொத்த வரவு | ரூ.307868.00 |
| மொத்த செலவு | ரூ.268425.00 |
| இறுதியிருப்பு | ரூ.39443.00 |

| | |
|---|---|
| வங்கியில் | ரூ.33570.00 |
| கையில் | ரூ.5873 .00 |
| மொத்தம் | ரூ.39443.00 |

**- பங்குத்தந்தை**

## வரவேற்கிறோம்

இறையாசீராய் எம் இல்லங்களில் பிறந்து பொற்பை திருச்சபையை அலங்கரிக்கும் அன்பு மலர்களே உங்களை பாசமுத்தத்துடன் வரவேற்கிறோம்.

24.5.13 — தேவ ரோஹீத் — சேசுவடியான் மரிய ராஜசுமதி பொற்பை

# சிந்தனை சுவடுகள்

**மிகப்பெரிய காற்றாடி!**

காற்றின் உதவியால் அதிக மின்சாரம் தயாரித்து தரும் உலகின் மிகப்பெரிய இரண்டு காற்றாடிகள் ஜெர்மன் நாட்டிலுள்ள எம்டன் நகரில் உள்ளது. இங்குள்ள ஒரு காற்றாடி மூலம் காற்றின் உதவியால் சுமார் 4500 கிலோ வாட் மின்சாரத்தை தயாரிக்க முடியும். நமது நாட்டில் 250 முதல் 1000 கிலோ வாட் உற்பத்தி செய்யும் காற்றாடிகளே மிக அதிகமாக உள்ளன.

A. டென்சன், வெள்ளகோவில்

**இளநரை போக்க...**

மருதாணி சாறு, கருவேப்பிலைசாறு கரிசலாங்கன்னி கீரைசாறு, வெந்தயக்கீரை சாறு, இந்த நான்கையும் சம அளவு எடுத்துக்கொள்ளவும் இந்நான்கு சாறுகளின் அளவிற்கு தேங்காய் எண்ணெயுடன் நன்கு கலக்கவும் நீர் வற்றும் அளவுக்கு காய்த்து வடிகட்டி தொடர்ந்து தலைக்கு தேய்த்து வந்தால் இளநரை மறைந்து விடும்.

D. ஜேசிகா ரெஜீலின், வெள்ளகோயில்

## பள்ளி ஒரு பூந்தோட்டம்

பள்ளி ஒரு பூந்தோட்டம்! – அதில்
செடி நடுபவர் பெற்றோர்!
உரமிட்டு வளர்ப்பவர் ஆசிரியர்!
பூவாய் பூத்துக் குலுங்குவது
மாணவர்களாகிய நாம்! – பெற்றத்தாய்
நம்மை சுமந்ததோ 10 மாதங்கள் ! –
ஆனால் பள்ளி என்னும் பூந்தோட்டம்
நம்மை சுமப்பதோ 12 ஆண்டுகள் !
ஏதும் அறியாமல் நுழைந்தோம்
முதல் வகுப்பில் ! – ஆனால்
எல்லாம் அறிந்தவர்களாய்
வெளிவந்தோம்
பன்னிரெண்டாம் வகுப்பில் !
ஒழுக்கத்தால்! அன்பால்! பண்பால்!
உலகை ஆளக் கற்று தரும்
பள்ளி பூந்தோட்டத்தை என்றும்
மறவோம்

V. கிளாடிஸ் மில்க்கா, பொத்தகாலன்விளை

## சிந்தனைச் சுடர்கள் :

மரியாதையாகப் பேசுவதும், நடப்பதும், செலவில்லாத செல்வங்கள்
– ஜார்ஜ் எலியட்

வாழ்கையில் எதிர்ப்படும் துன்பங்கள் எதிர்கொள்வதற்கு நண்பர்களே உற்ற துணையாவர்
–அரிஸ்டாட்டில்

விருப்பங்கள் அரை மடங்கு அதிகமானால் சங்கடங்கள் இரு மடங்காகும்
–பிராங்ளின்

விதியானது ஒரு கதவை மூடும்போது நம்பிக்கையானது இன்னோரு கதவைத் திறக்கிறது.
–ஆவ்பரி

அனுபவம் ஒரு நல்ல பள்ளிக்கூடம் ஆனால் அறிவற்றவர்கள் அதிலும் கற்றுக் கொள்வதில்லை.
– ஜான்சன்

உன்னைப் பார்த்து பிறர் பொறாமைப்படுகின்றனர் என்றால் நீ வளர்ந்து வருகிறாய் என்று அர்த்தம்
– சாணக்கியர்

S. மேரி பிரின்ஸில்லா, B.Tech, பொத்தகாலன்விளை

# டாக்டர். ராதாகிருஷ்ணன்



வேதாந்தக் கருத்துகளை விளக்கி ஆங்கிலத்தில் நிறையப் புத்தகங்கள் எழுதியுள்ளார் இவர். அதன் மூலம் நமது பாரம்பரியப் பெருமையை உலகறியச் செய்தார். 1888-ல் பிறந்தவர். சென்னை, கிறிஸ்தவக் கல்லூரியில் படித்து பட்டம் பெற்று, பிரசிடென்சி கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றினார். காசி இந்து பல்கலைக்கழகத் துணைவேந்தராக 1939முதல் 49வரை இருந்தார். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல அமைப்புகளில் பணியாற்றியவர். 1948-ல் யுனெஸ்கோ இந்தியக் குழுவுக்குத் தலைவராக இருந்தார். 1949-52ல் சோவியத் யூனியனில் இந்தியத் தூதுவராக இருந்த இவர் ஸ்டாலினைச் சந்தித்துப் பேசிய ஒரே தூதுவர் என்ற பெருமைக்கும் உரியவர். 1952 முதல் 1962-வரை இந்தியக் குடியரசின் துணைத் தலைவராகவும், 1962 முதல் 67 வரை தலைவராகவும் பதவி வகித்தார். 1954-ல் இவருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. உலகம் போற்றும் அறிஞரான இவருடைய மறைவு 17-04-1975. இவருடைய பிறந்த தினம் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

நன்றி – **‘புகழ்பெற்ற இந்தியர்கள்’**

## அன்னை



பொங்கி எழும் அன்னையே
புகழ் சேர்க்கும் அன்னையே
அரவணைப்பாய் எம்மையே
அண்டி வந்தோம் உம்மையே
சிங்கார அன்னையே
சிரிக்கும் அன்னையே
பக்தருக்கு அருள்வாயே
பதமலர் பணிவோமே
அறிஞர் வியக்கும் அன்னையே
அறிவைப் பெருக்கும் அன்னையே
பணிகள் சிறக்கும் அன்னையே
பாங்காய் பணிவோம் நாளுமே

T. சுகிர்தமணி அன்பரசன், கவரப்பேட்டை

# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

★ தொழில் முன்னேற்றம் கிடைத்ததற்கு நன்றி.– ஜோஸ்பின்,பொற்பை

★திருமண வரம் கிடைத்ததற்கு நன்றி – மரிய ஜாண்,பேபி– இணையம்

★குழந்தைகளுக்கு நற்சுகம் கிடைத்ததற்கு நன்றி – ரஜில்ட்டன்,சின்னமுட்டம்

★திருமண வரம் கிடைத்ததற்கு நன்றி – அல்போன்ஸ் – கூட்டப்புளி

★திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி – சூசை நாயகம்,இணையம்

★நல்ல உடல் நலம் கிடைத்ததற்கு நன்றி – லீனா,சென்னை

★வேலை வாய்ப்பு கிடைத்ததற்கு நன்றி – ஜார்ஜ், திருமூலநகர்

★புதிய இல்லம் அமைத்ததற்கு நன்றி – கவிதா,சென்னை

★விசா கிடைத்ததற்கு நன்றி – அகிலன் , T.களிகை

★தேர்வில் வெற்றி பெற்றதற்கு நன்றி – ஜெனோஸ்,கொழுந்தட்டு.

★திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி – வினிதா ,முள்ளூர்துரை.

★திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி – பிரான்ஸிஸ், இணையபு.துறை

★திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி – ரெஜி,ஜென்ஸி,மணலிக்கரை

★உடல் நலம் கிடைத்ததற்கு நன்றி – ஜோன்ஸ், மணலிக்கரை

★சுகப்பிரசவம் கிடைத்ததற்கு நன்றி – சுபிதா , ஹெலன் காலணி.

★வேலை கிடைத்ததற்கு நன்றி – மெல்கீஸ்,– கண்டன்விளை

★புதிய இல்லம் அமைத்ததற்கு நன்றி –விமல் ராஜ்,முள்ளூர்துறை

★திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி –பாலன்,ரோஸ்,சென்னை

★திருமண வரம் கிடைத்ததற்கு நன்றி – அல்வினி,குரும்பனை★

★குழந்தை வரம் கிடைத்ததற்கு நன்றி – சந்திரன்,கன்னியாகுமரி

★நோயிலிருந்து விடுதலை கிடைத்ததற்கு நன்றி–தோமாஸ்,மெற்றில்டா,பெங்களூர்

★திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி – டென்னிஸ் வளன், கேரளா

★திருமண வரம் கிடைத்ததற்கு நன்றி – விக்டோரியா,முட்டம்

★வேலை கிடைத்ததற்கு நன்றி – பிரதீப் ராஜா ,வாழைத்தோட்டம்.

★குழந்தை வரம் கிடைத்ததற்கு நன்றி – ரீகன்,நெய்யூர்.

பங்குதந்தை

# புனித கன்னிமரியின் பிறப்பு



ஏறக்குறைய இருபது நூற்றாண்டுகளுக்கு முன் கலிலேயா நாட்டில் உள்ள நாசரேத் என்னும் சிற்றூரில் சுவக்கீன் அன்னாள் என்ற தூய தம்பதிகள் வசித்தனர்.இவர்கள் தாவீது அரசரின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள்.இவர்களுக்கு முதிர் பிராயமாகி விட்டது. குழந்தைகள் கிடையாது. இனி குழந்தை பிறக்காது என்று நினைத்தார்கள். இறைவன் எல்லாம் வல்லவர். இவர்களுக்கு பெண் குழந்தையைக் கொடுத்தார். பெண்களுக்கு ள் ஆசீர்வதிக்கப்பட்டவளான அவள்,தன் பெற்றோரான சுவக்கீனுக்கும் அன்னம்மாளுக்கும் மகிமையானாள். குழந்தைக்கு மரியாள் என்று பெயரிட்டார்கள்.உலகத்தை மீட்டு இரட்சிக்கும் படி குழந்தையாக பிறக்க இருந்த இயேசுவின் தாய் இவளே. பிள்ளைகள் தம் அன்னையின் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றனர். இதற்காகப் பரித்தியாகங்கள் செய்து பணம் சேர்த்து அன்னைக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்கின்றார்கள்.அன்னையும் தம் பிள்ளைகளுக்கு ஏதாவது வாங்கி கொடுக்கின்றாள். மரியன்னைக்கு நாம் செய்யும் சிறந்த அன்பளிப்பு: இவளது புண்ணியங்களான தாழ்ச்சி, அன்பு, பொறுமை, கற்பு, கீழ்ப்படிதல் முதலியன புண்ணியங்களை அனுசரிப்பதாக உறுதி செய்து, அதற்காக பெருமுயற்சி செய்வதே.அன்னையும் தம் பிள்ளைகளாகிய நமக்கு வேண்டிய வரங்களைத் தாராள மனத்துடன் கொடுப்பாள். நாம் அவளுடைய பிரியமுள்ள பிள்ளைகளாக நடந்து கொண்டால், அவள் தாயென தன்னைக் காட்டுவாள். அவளுடைய அமல உற்பவத்தைக் குறித்து அல்லது கடவுள் அவளுக்கு கொடுத்துள்ள வல்லமை, ஞானம், இரக்கம் இவற்றிற்கு நன்றியாக காலையிலும், மாலையிலும் மங்கள வார்த்தை மன்றாட்டை மும்முறை சொல்லி, பாவத்தை விலக்கவும் அவளது புண்ணியங்களை அனுசரிக்கவும் அவளது உதவியை நாடுவோம்.

– மெர்ஸி, பொற்பை

## குலவிளக்கே...



என்றும் எம்மைக் காத்திடும் சர விளக்கே
ஏற்றம் பெற்று யாம் வாழ வந்த திருவிளக்கே
ஏணி போல ஏற்றி விடும் அகல் விளக்கே
திருமண வரம் தரும் எங்கள் திருவிளக்கே
குழந்தை வரம் தரும் எங்கள் குல விளக்கே
பொற்றாமரையாய் மலரும் பொன் விளக்கே
பொற்பை நகரைக் காத்து நிற்கும் புகழ்விளக்கே நீ வாழ்க!

D. ஜோஸ்பின் மேரி தாசன், கவரப்பேட்டை

# நான்காம் ஆண்டு
## நினைவு அஞ்சலி







திருமதி. **S.காணிக்கை ஜெபமாலை**

**பிறப்பு**
**07.10.1928**



**இறப்பு**
**17.09.2009**

அன்பு அன்னையே....
உன்னை நினையாத நாளில்லை!
என்றும்
இறைவன் நிழலில் நீங்கள்!!
இன்றும்
உம் நினைவில் நாங்கள்!!!

**பிரிவால் வாடும் அன்பு நெஞ்சங்கள்**

மகள் : **S.லீமா ரோஸ் கத்திரின்**


பேரன் : **S.சந்தன இஃதுஸ் சேவியர் ராஜா**


பேத்தி : **S.தேவ சகாயராணி**

மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள்

பொத்தக்காலன்விளை

# நினைவு அஞ்சலி



திரு. **M.மரிய உபகாரம்** திருமதி. **M.சூசை அந்தோணி**

**மண்ணில் மலர்ந்தது**
**06.11.1938**
**விண்ணில் மலர்ந்தது**
**25.02.1992**



**மண்ணில் மலர்ந்தது**
**12.11.1939**
**விண்ணில் மலர்ந்தது**
**01.09.2001**

அன்பு தந்தையே !
அன்று வீரன் என்ற மூன்றெழுத்தை உனதாக்கி
தாய் திருநாட்டிற்காய் உழைத்திட்ட
உங்கள் திருவடிகளுக்கு வந்தனங்கள் பல கோடி
அம்மா !
அன்று உன் குழந்தைகளின் உடல் நலத்திற்காக
பாலோடு தேனையும் கலந்து ஊட்டிய
உன் அன்புக்கு ஈடேது, எல்லையேது!
அன்பு தெய்வங்களே !
அன்று உறவென்னும் மூன்றெழுத்தில் எங்கள் சொந்தமான நீங்கள்
இன்று உங்கள் குழந்தைகளின் நல் வாழ்விற்காக
விண்ணகத் தந்தையை மன்றாட வேண்டி
உங்கள் திருவடிகளை வணங்கி நிற்கும்

அன்பு மகள் : **S. மிக்கேல் உஷா**

மகன்கள் : **S. கிங்ஸ்டன், S. அந்தோணி சசி**

மருமகள் : **A. சகாய ஜெர்லின் பாலா**

மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள்
பொத்தக்காலன்விளை

## அப்பாவுக்கு என்ன தெரியும்? தந்தையைப் பற்றி மகன் !

5 வயது : என் தந்தையால் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை.

7 வயது : என் தந்தைக்கு பல விஷங்களைப் பற்றி நன்கு தெரியும்

10 வயது : என் தந்தைக்கு எல்லா விஷங்களைப் பற்றியும் தெரியாது

12 வயது : என் தந்தைக்கு ஒன்றுமே தெரியாது.

14 வயது : அவரா? காலம் மாறியது அவருக்கு எங்கே புரிகிறது?

21 வயது : கிடக்கிறார் அவர். அவரிடம் போய் யோசனை கேட்பதா?

35 வயது : ஏதோ கொஞ்சம் தெரியும்.

40 வயது : அவர் என்ன நினைக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதில் தப்பில்லையே !

45 வயது : அவரின் யோசனையைக் கேட்டு பின் முடிவு எடுக்கலாமே !

50 வயது : என் தந்தையார் இது போன்ற விஷயங்களில் எவ்வளவு சிறப்பாக தீர்மானம் எடுப்பார் தெரியுமா?

55 வயது : அவர் இல்லாதது உண்மையிலேயே பெரிய கஷ்டமாக இருக்கிறது.அவரின் ஆலோசனையைக் கேட்க முடியாமல் போனது பெரிய நஷ்டம்.

60 வயது : அவருடைய அறிவும் அனுபவமும் எங்கே? நான் எங்கே?

G. ஜேம்ஸ் பூபால்ராயன், கடகுளம்

## தெரிந்து கொள்ளுங்கள்...

★ பாலைவனத்தில் மேகங்கள் உருவாகாது.அங்கு வீசும் காற்றில் சிறிதளவும் ஈரப்பசை இருக்காது .அதனால் அங்கு வீசும் காற்று மேலும் வெப்பமடைந்து உயரே சென்றாலும் மேகமாக உருவாகாது.

★ ஏரிகளைக்கூட கடல்கள் என்று கூறும் விந்தையைப் பாருங்கள். காஸ்பியன்கடல், சாக்கடல், ஆரல்கடல் இவையாவும் ஏரிகளாகும்.இந்த ஏரிகளின் நீர் உப்பாக இருக்கும் அதனால் கடல் என்ற பெயரை வைத்துவிட்டனர்.

★ கோடைக் காலங்களில் வெண்மை நிற ஆடைகளை அணிவது நல்லது. வெண்மை நிறம் வெப்பத்தைக் கிரகிக்கும் ஆற்றல் குறைந்தது.அதே நேரத்தில் வெப்பத்தை வெளியேற்றும் ஆற்றல் மிகுந்தது.அதனால் உடலை வெப்பம்


தொகுப்பு – பிரிட்டோ, பொற்பை




# குட்டீஸ் கார்னர்

ஹலோ குட்டீஸ், போன மாதம் சுதந்திரதினத்தை சந்தோசமா கொண்டாடி இருப்பீங்க... இந்த மாதம் கால்வருட தேர்வுக்கு படிங்கிறீங்களா! தினமும் புத்தகத்தை எடுத்து படிக்கும் முன்பு நம் திருக்கல்யாண தாய்க்கு ஜெபம் சொல்ல மறந்திடாதீங்க. நம் மாதா நமக்கு தேர்வு எழுத தேவையான ஞாபகசக்தியை தருவாங்க. கவலையே வேண்டாம். நம் திருக்கல்யாண அன்னை எப்பவும் நம் கூடத்தான் இருப்பாங்க. ஓ.கே...ஸீ யூ... குட்டீஸ்...

**- அ.லூயிஸ் ஜெஃப்ரின், திசை**




ஹாய் குட்டீஸ்,

இங்கே இருக்கும் இந்த இரண்டு படத்திற்குமிடையே எத்தனை வித்தியாசங்கள் இருக்கிறது என்று இந்த தடவையும் சொல்ல மாட்டேன். உங்கள் திறமையை மதிப்பெண்ணிட்டு நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.

12 வித்தியாசங்கள்............. 100
7 வித்தியாசங்களுக்கு மேல்......... 75
5 வித்தியாசங்களுக்கு மேல்......... 50
1 வித்தியாசம்.............. !!??

வேறென்ன?
ஃபெயிலுதான்....

100




கடைசி கடிகாரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் நேரம் சொல்ல முடியுமா பார்ப்போம்.....?



## புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி வட்டார அளவில் இரட்டை சாம்பியன்

நாசரேத் வட்டார அளவிலான தடகளப் போட்டி பள்ளிகளுக்கு இடையேயான சுதந்திர தின அரசு விளையாட்டுப் போட்டிகள் ஏக ரட்சகர் சபை சாலைப்புதூர்பள்ளி மைதானத்தில் மாணவ மாணவியர்களுக்கு பல்வேறு பிரிவில் நடைபெற்றது.

20-08-2013 அன்று மாணவிகளுக்கான தடகளப் போட்டியில் சூப்பர் சீனியர் பிரிவில் S. மோகன அம்பிகை என்ற மாணவி மும்முறை துள்ளி தாண்டும் போட்டியில் முதலிடமும், 100 மீட்டர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தையும், 200 மீட்டர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும், நீளம் தாண்டும் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று சாம்பியன் பட்டம் பெற்றாள். S.லிடியா பபிக் 400 மீட்டர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தையும், 800 மீட்டர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார். மற்றும் 17 வயது உட்பட்ட பிரிவில் A. மெனுசியா என்ற மாணவி நீளம் தாண்டும் போட்டியில் மூன்றாம் இடத்தையும், 100 மீட்டர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார். A. ஜெய பவித்ரா என்ற மாணவி 800 மீட்டர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தையும், J. ஜெனிபர் திவ்யா என்ற மாணவி 100 மீட்டர் தடை தாண்டும் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றார். மற்றும் 14 வயதுக்கு உட்பட்ட பிரிவில் S. வினிதா என்ற மாணவி 600 மீட்டர் ஓட்டத்தில் மூன்றாம் இடம் பெற்றார்.4X100 தொடர் ஓட்டத்தில் சூப்பர் சீனியர் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றனர். 19 வயது மாணவியர் பிரிவில் எம் பள்ளி மாணவி **S. மோகன அம்பிகை சாம்பியன் பட்டம் பெற்றாள்.**

21-08-2013 அன்று மாணவர்களுக்காக நடைபெற்ற தடகளப்போட்டியில் 17 வயதுக்கு உட்பட்ட பிரிவில் 200 மீட்டர் ஓட்டத்தில் **A. அருள் விஜய்** என்ற மாணவன் முதலிடமும், 100 மீட்டர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும், நீளம் தாண்டும் போட்டியில் முதல் இடத்தையும் பெற்று **சீனியர் பிரிவில் சாம்பியன் பட்டம் பெற்றான்.** அதே பிரிவில் M. சர்லின் கிஷோர் என்ற மாணவன் ஈட்டி எறியும் போட்டியில் முதலிடத்தையும், வட்டு எறியும் போட்டியில் J. ஜாண் மகிழன் இரண்டாம் இடத்தையும், 400 மீட்டர் ஓட்டத்தில் P. நிர்மல் ராஜா இரண்டாம் இடத்தையும், 4X 100 தொடர் ஓட்டத்தில் சீனியர் பிரிவில் கிங்ஸ்டன், நிர்மல் ராஜா, கிஷோர், அருள் விஜய் ஆகியோர் முதலிடத்தைப் பெற்று எம் பள்ளிக்கு பெருமை சேர்த்தனர்.

ஜுனியர் மாணவிகளுக்காக கோ-கோ குழுப் போட்டியில் எம் பள்ளி மாணவியர்கள் இரண்டாம் இடம் பெற்றனர்.

வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களை எம் பள்ளி தாளாளர் தந்தை அருள்திரு.T.**பபியான்ஜோசப்,** தலைமை ஆசிரியை S.**மார்க்ரெட்** மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்.

A. நெல்சன் சத்தியராஜ், உடற்பயிற்சி ஆசிரியர்
புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி
பொற்பை



# உருளைக் கிழங்கு நூடுல்ஸ் போண்டா

**தேவையான பொருட்கள் :**

வேகவைத்த மசித்த உருளைக்கிழங்கு -1 கப் , பொடியாக நறுக்கிய வெங்காயம் - 1/4கப் , பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய் -சிறிதளவு , இஞ்சி , கொத்தமல்லி -1/4 கப் , துருவிய கேரட் -1/4 , டீஸ்பூன்,கடுகு,கடலை மாவு - 1/2 கப் ,அரிசி மாவு - 1/4 கப் ,சோள மாவு - ஒரு டீஸ்பூன் , பிளெய்ன் நூடுல்ஸ் - சிறிதளவு , மிளகாய்த்தூள்-1/2 டீஸ்பூன்,உப்பு,எண்ணெய்-தேவையான அளவு.

**செய்முறை :**



கடாயில் கடுகு தாளித்து, இஞ்சி,பச்சை மிளகாய், கேரட் துருவல்,வெங்காயம், கொத்தமல்லி சேர்த்து, வதக்கி, மசித்த உருளைக்கிழங்கையும் போட்டு வதக்கி இறக்கி உருண்டைகளாக உருட்டிக்கொள்ளவும். எண்ணெய் நீங்கலாக மேல் மாவுக்கு கொடுத்துள்ளவற்றை சிறிது தண்ணீர்விட்டு கலந்து கொள்ளவும். உருட்டிய உருளைக்கிழங்கு கலவையை கடலைமாவு கலவையில் புரட்டி ( மேலே நூடுல்ஸ் சுற்றிக் கொள்ளும்படி செய்து ) எண்ணெயில் பொரித்தெடுக்கவும். பார்க்க அழகாகவும், சாப்பிட சுவையாகவும் இருக்கும் இந்த போண்டா.

-ஜோஸ்பின்,தூத்துக்குடி




**ஓசி எப்படி வந்தது ?**

# தெரிந்து கொள்வோமா....

செலவில்லாமல் கிடைக்கக் கூடிய பொருட்களை இன்று நாம் ஓசியில் கிடைத்தது என்று கூறுகிறோம்.இந்த **ஓசி** என்ற வார்த்தை எப்படி வந்தது? ஆங்கிலேய ஆட்சியில் கிழக்கிந்தியக் கம்பெனி சார்பில் அனுப்பப்படும் தபால்களுக்கு அஞ்சல் தலைகள் ஒட்டப்படுவதில்லை. ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பெனியின் பணிக்காக என்பதைக் குறிக்கும் O.C.S (On Company Serivice) என்ற முத்திரை மட்டும் குத்தப்பட்டு தபால்கள் அனுப்பப்பட்டன.இதனை சுருக்கமாக ஓசியில் அனுப்பப்படுகிறது என்று கூறிவந்தனர். நாளடைவில் இதுவே ஓசி என்ற வார்த்தை ஏற்பட காரணமாயிற்று.


-குமார்,கோவை

# தலைசிறந்த தந்தையர்கள்

| | |
|---|---|
| தேசத் தந்தை | – மகாத்மா காந்தி. |
| வரலாற்றின் தந்தை | – ஹரோடோட்டஸ். |
| புவியியலின் தந்தை | – எராடோஸ்தீனஸ். |
| அரசியல், விலங்கியல் துறைகளின் தந்தை | – அரிஸ்டாட்டில். |
| தாவரவியலின் தந்தை | – தியோபிராஸ்டஸ். |
| பொருளாதாரவியலின் தந்தை | – ஆடம்ஸ்மித். |
| சமூகவியலின் தந்தை | – அகஸ்டஸ் கொம்டி. |
| ஹோமியோபதியின் தந்தை | – சாமுவேல் ஹானிமன். |
| கணிப்பொறியின் தந்தை | – சார்லஸ் பாபேஜ். |
| இந்திய சினிமாவின் தந்தை | – தாதா சாஹேப் பாபா. |
| ரயில்வேயின் தந்தை | – ஜார்ஜ் ஸ்டீவன்ஸன். |
| தொலைபேசியின் தந்தை | – அலெக்ஸாண்டர் கிரகாம் பெல். |
| மருத்துவத்தின் தந்தை | – ஹிப்போகிரட்டஸ். |
| செல்போன் தந்தை | – மார்ட்டின் கூப்பர். |
| அணுகுண்டின் தந்தை | – ராபர்ட் ஒபன்ஹெய்மர். |

–ஜார்ஜ்,பெரியதாழை

# ஒரு வரி உண்மைகள்




பறவைகளில் பெரியது தீப்பறவை.
மீன்கள் சாகும் வரை வளர்ச்சியடையும்.
மலைப் பாம்புகளுக்கு விஷம் கிடையாது.
வெட்டு கிளியின் ரத்தம் வெள்ளை நிறம்.
சிறுத்தை நன்றாக மரம் ஏறும்.
நீர் நாய் எனப்படுவது நாயினமே அல்ல.
கொசுவின் ஆயுள் மூன்று வாரங்கள்தான்.
முயல்களுக்கு முன் காலைவிட பின்கால் நீளமானது.
கங்காரு ஒரே தாவலில் 40 அடி கூட தாண்டும்.
ராஜ நாகம் இதர பாம்புகளையும் தின்னும்.
பாம்பு வாய்க்குள் சென்றதைத் துப்ப முடியாது.
நான்கு முழங்கால்கள் கொண்டது யானை மட்டுமே.
தாய்க் கரையான் ஒரு நாளில் 80,000 முட்டையிடும்.

–செல்வன்,புதுக்குடி

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

**இடமிருந்து வலம் :** 1.வல்லமை (8:46) 5. பெத்சாய்தா (9:10) 9. பெரியவர் (9:48) 13.கப்பர் நாகும் (10:15) 17.கண் (11:34) 21.தர்மம் (12:33) 25.பணிவிடை (16:13)

**வலமிருந்து இடம் :** 2.நம்பிக்கை (8:48) 6. தன்னலம் (9:23) 10.அறுவடை (10:2) 14. மரியா (10:39) 18.ஐந்து (12:6) 22. பிலிவு (12:51) 26.யோவான் (16:16)

**மேலிருந்து கீழ் :** 3.பெற்றோர் ( 8:56) 7.மைந்தர் (9:35) 11.வணக்கம் (10:4) 15.நற்கொடைகள் (11:13) 19. வாழ்வு (12:15) 23. மழை (12:54)

**கீழிலிருந்து மேல் :** 4. அங்கி (9:3) 8.விளக்கம் (9:45) 12. வேலையாளர் (10:7) 16. நினிவே (11.30) 20. உயிர் (12: 23) 24. நாம் (15:23)

**கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றிப் பெற்றவர்கள் :**


1.D. ஜோஸ்பின் மேரி தாசன் , கவரப்பேட்டை
2. S. சுரேஸ் கீதா, கவரப்பேட்டை
3. S. டோமினிக் பெனிட்டா, கவரப்பேட்டை
4. A. அனுஷா அகஸ்டின், கவரப்பேட்டை
5. A. அன்னபுஸ்பம் ராஜன், கவரப்பேட்டை
6. J. அனிதா ஜாண்சன், கவரப்பேட்டை
7. J. சேசுதுரை ஜென்ஸி ,கவரப்பேட்டை
8. D.கலா சகாயம் ,கவரப்பேட்டை
9. P.ஜோஸ்பின் ஸ்டெல்லா மேரிபீற்றர், மாதர்பாக்கம்
10. தேவசகாயம் லூர்துமேரி, பிரகாசபுரம்
11. R. ராபின் பிரபா,சென்னை
12.A. அந்தோணி ரெனி சாலினி,பொற்பை
13.D. அந்தோணி ஏசுதாசன்,பொற்பை
14.குயின் ரோஸ் பாக்கியம்,பொற்பை
15. கபிரியேல் மேரி,பொற்பை
16. S. மேரிலீலா,பொற்பை
17.A. ராஜேஷ் ரமேஷ்,பொற்பை
18.A. ரோஷினி சகாயடாப்னி,பொற்பை
19. M. பபிதா மலர்,பொற்பை
20.M.அந்தோணி கிறிஸ்டோபர்,பொற்பை
21.M. சகாய விஜய ராஜா, பொற்பை
22.M. அமல சிறுமலர், பொற்பை
23. M. ரோஸ் பாத்திமா மேரி,பொற்பை
24.S.லூர்து ரெக்ஸ்,பொற்பை
25.S.மரிய மெர்சி , பொற்பை
26. A. கரோலின் சிறுமலர் , கொழுந்தட்டு
27.A. சகாய ஷாருகான்,கொழுந்தட்டு
28.S.ஆரோ அல்ஃபினா ,மயிலாடுதுறை
29.K. ஷைனி, வள்ளயூர்
30.S. சுதா செல்வகுமார், குற்றாலம்
31. F.அந.தோணி ராசையா, கரூர்
32. J. சுதா ராஜன், சென்னை
33. R. அசோக் பிரின்ஸியா, ஏரல்
34.M.டேவிட் தேவராஜன், வெள்ளக்கோவில்
35. S. நிர்மலா சந்தியாகுராஜன், மார்க்கம் பட்டி
36. S. தாமஸ், கோயம்புத்தூர்
37.J.S.அமல்ராஜ் லென்சியா, கும்முடிபூண்டி
38. J.A. ரவீஸ்டர் சுமதி, கும்முடிபூண்டி
39.G.பொன்மேரி கபிரியேல், கும்முடிபூண்டி
40. P.சந்தன திரவியம், பொற்பை
41. A.மேரி சாலினி, பொற்பை
42.A. அந்தோணி ஷைனி, பொற்பை
43.S. ஜோஸ்பின், பொற்பை
44.G. ரெஜினாள் மேரி, பொற்பை
45.A. மரிய மெர்லின், அடைக்கலாபுரம்
46. பிரின்ஸஸ் ஜேம்ஸ், பொற்பை
47. S. ஜோஸ் பிரகாஸ், பொற்பை

## இதய அஞ்சலி

| | | |
|---|---|---|
| 26.7.13 | ஜோசப் | பொற்பை |
| 26.8.13 | பிரகாசம் | பொற்பை |

# வாழ்வு தரும் வார்த்தைகள் – செப்டம்பர் – 2013

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | ஆண்டின் ஞாயிறு 22 | சீ ஞா 3:17-18.20.28-29; எபி12:18-19.22-24 a ; | லூக் 14:1.7-14 |
| 2. | | 1 தெச 4: 13-18; | லூக் 4: 16-30. |
| 3. | புனித பெரிய கிரகோரியார் | 1 தெச 5:1-6.9-11; | லூக் 4:31-37 |
| 4. | | கொலோ 1:1-8; | லூக் 4:38-44 |
| 5. | புனித லாரன்ஸ் ஜஸ்டினியன் | கொலோ 1:9-14; | லூக் 5:1-11 |
| 6. | | கொலோ 1:15-20; | லூக் 5:33-39 |
| 7. | | கொலோ 1:21-23; | லூக் 6:1-5 |
| 8. | மரியாள் பிறந்த நாள் ஆண்டின் ஞாயிறு 23 | சாஞா 9:13-18b ; பில 9-10.12-17; | லூக் 14:25-33 |
| 9. | புனித பேதுரு கிளாவர் | கொலோ 1:24-2:3; | லூக் 6:6-11 |
| 10. | புனித நிக்கோலாஸ் | கொலோ 2:6-15; | லூக் 6:12-19 |
| 11. | | கொலோ 3:1-11; | லூக் 6:20-26 |
| 12. | | கொலோ 3:12-17; | லூக் 6:27-38 |
| 13. | புனித ஜான் கிறிசோஸ்தம் | 1 திமொ 1:1-2.12-14; | லூக் 6:39-42 |
| 14. | திருச்சிலுவை மகிமை | எண் 21:4b-9; பிலி2:6-11; | யோவா3:13-17 |
| 15. | ஆண்டின் ஞாயிறு 24 | விப 32:7-11.13-14; 1 திமொ 1:12-17; | லூக் 15:1-32 |
| 16. | புனிதர்கள் கொர்னேலியுஸ்,சிப்ரியான் | 1 திமொ 2:1-8; | லூக் 7:1-10 |
| 17. | புனித ரூபர்ட் பெல்லார்மின் | 1 திமொ 3:1-13; | லூக் 7:11-17 |
| 18. | புனித ஜோசப் குப்பெர்த்தீனோ | 1 திமொ 3:14-16; | லூக் 7:31-35 |
| 19. | புனித ஜனாரியுஸ் | 1 திமோ 4:12-16; | லூக் 7:36-50 |
| 20. | | 1 திமொ 6:2c-12; | லூக் 8:1-3 |
| 21. | புனித மத்தேயு | எபேசி 4:1-7.11-13; | மத் 9:9-13 |
| 22. | ஆண்டின் ஞாயிறு 25 | ஆமோ 8:4-7; 1 திமொ 2:1-8; | லூக் 16:1-13 |
| 23. | | எஸ்ரா 1:1-6; | லூக் 8:16-18 |
| 24. | | எஸ்ரா 6:7-8.12b.14-20; | லூக் 8 :19-21 |
| 25. | | எஸ்ரா 9:5-9; | லூக் 9:1-6 |
| 26. | புனித கோஸ்மாஸ் தமியான் | ஆகாய் 1:1-8; | லூக் 9:7-9 |
| 27. | புனித வின்சென்ட் தே பவுல் | ஆகாய் 2:1-9; | லூக் 9:18-22 |
| 28. | புனித வென்செஸ்லாஸ் | செக் 2:5-9.14-15a; | லூக் 9:43b-45 |
| 29. | ஆண்டின் ஞாயிறு 26 | ஆமொ 6:1a.4-7; 1 திமொ 6:11-16; | லூக் 16:19-31 |
| 30. | புனித ஜெரோம் | செக் 8:1-8; | லூக் 9:46-50 |




# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி**

**லூக்கா : அதிகாரம் 17 முதல் 22 வரை**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.09.2013**

## இடமிருந்து வலம்

1. நாங்கள் பயனற்ற .............................
5. அந் நகரில் ................ ஒரு வரும் இருள்தார்.
9. வரி தண்டுவோர்க்குத் தலைவர் யார்?
13. விண்ணகத்தில் ............ மாட்சியும் உண்டாகுக
17. என் அன்பு ............. அனுப்புவேன்.
21. வழிமரபு உருவாக்க வேண்டுமென்று .............. எழுதி வைத்துள்ளார்.
25. பாஸ்கா விருந்து உண்பதற்கான ..................... எங்கே?

## வலமிருந்து இடம்

2. இயேசுவே எங்களுக்கு ..........................
6. யார் இறையாட்சிக்கு உட்படுவது கடினம்?
10. இன்று இந்த வீட்டிற்கு ................ உண்டாயிற்று.
14. இவர்கள் பேசாதிருந்தால் ................. கத்தும்.
18. அப்பொழுது ..................... நம்முடையதாகும்.
22. உடனே .................... வராது.

## மேலிருந்து கீழ்

3. .................. கண்களுக்குப் புலப்படும் முறையில் வராது.
7. ஊசியின் காதில் ..................... நுழைவது எளிது.
11. பகைவர்களைக் கொண்டுவந்து என் முன் ................... செய்யுங்கள்.
15. என் இல்லம் ................ வீடு.
19. கட்டடத்துக்கு .................... ஆயிற்று.
23. இயேசு .......................... நேரங்களில் ஒலிவ மலைக்குச் சென்று தங்கிவந்தார்.

## கீழிருந்து மேல்

4. ............... வந்து அவர்கள் அனைவரையும் அழித்தது.
8. நான் மீண்டும் ........... பெற வேண்டும்.
12. பெத்தானியா எனும் ஊர் எந்த மலைக்கு அருகில் இருந்தது?
16. யோவானை ................. என்று உறுதியாய் நம்பியிருந்தனர்.
20. உயிர்த் தெழுதலை மறுப்பவர் யார்?
24. தண்ணீர் சுமந்து கொண்டு ஓர் ............... உங்களுக்கு எதிரே வருவார்.

## திருத்தல வழிபாடுகள்

★ ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு செபமாலை , 10.15 மணி முதல் 11.30 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு அதனைத் தொடர்ந்து ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். மாலை சிறப்பு மாலை ஆராதனையும் நடைபெறும். மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.00 மணிக்கு நவ நாள் திருப்பலியும் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.

★ மாதத்தில் முதல்செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலை திருப்பலி.

★ மாதத்தில் முதல் புதன் ஆலய கெபியில் மாலை திருப்பலி.

★ மாதத்தில் இரண்டாவது புதன் நான்கு சந்தி கெபியில் மாலை திருப்பலி.

★ மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்.

★ மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

★ மாதத்தின் முதல் சனி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர் நடைபெறும்.

## இணையூர் வழிபாடுகள்

### நவமுதலூர்

★ வாரம் ஒருமுறை ஞாயிறு திருப்பலி மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலி நடைபெறுகிறது.

## திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பெருவிழா

| | | |
|---|---|---|
| ஜனவரி 14 – | மாலை 6.00 மணி | திருவிழா கொடியேற்றம் |
| ஜனவரி 21 – | மாலை 6.00 மணி | சிறப்பு நற்கருணை பவனி |
| ஜனவரி 22 – | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசயத் தேர்பவனி<br>சிறப்பு மாலை ஆராதனை |
| ஜனவரி 23 – | காலை 6.00 மணி | திருவிழா திருப்பலி |
| | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசய தேர்ப்பவனி<br>நற்கருணை ஆசீர் |

### அடுத்த இதழ்

ஜெபமாலை அன்னை பற்றியும், ஜெபமாலை பக்தி பற்றியும் சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது. உங்களுடைய வாழ்வில் அன்னை புரிந்த அற்புதங்கள் அதிசயங்கள் மேலும் அன்னையைப் பற்றிய கருத்துகள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் எங்களை வந்து

**சேர வேண்டிய கடைசி நாள் : 15.09.2013**

**சந்தாதாரராக ஆகுங்கள் !** **அன்னையின் அருள் பெறுங்கள் !**